Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 133 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 15.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

உணவகம், டீக்கடைகளின் கூடுதல் மின் நுகர்வில் யூனிட்டுக்கு ரூ.2 மானியம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை: 'உணவகங்கள், டீக்கடைகள், கிளவுட் கிச்சன் உள்ளிட்ட உணவு உற்பத்தி தொழிற்கூடங்கள் எரிவாயுவுக்கு (LPG) பதிலாக மின்அடுப்புகளைபயன்படுத்தும்போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்வுக்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும். ஒன்றிய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் காலம் வரை இந்த மானியம் வழங்கப்படும்' என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: 'வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் காரணமாக தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு (LPG) தட்டுப்பாட்டு இடர்பாடுகளை நீக்கி தொழில் துறை, உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு துறையினரின் தொழில் சீராக நடைபெற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதல்வர் ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த மாதம் பிப்ரவரி 28 அன்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப்படைகள் ஈரான் மீது போர் தொடுத்தன. இதனைத் தொடர்ந்து ஈரான் அரசால் ஹொர்முஸ் (Hormuz) ஜலசந்தியின் வழியாக செல்லும் கப்பல்கள் தடை செய்யப்பட்டது.

இதன் காரணமாக இந்தியாவிற்கு வளைகுடா பகுதியிலிருந்து வரும் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு தடைப்பட்டது. தமிழ்நாட்டில் எரிவாயு (LPG) தட்டுப்பாடு தொடர்பாக மார்ச் 10 ஆம் தேதி முதல்வர் தொடர்புடைய துறைகளுக்கு அறிவுரை வழங்கினார். இப்பிரச்சினை தொடர்பாக, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் மார்ச் 11–ஆம் தேதி தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு சங்கங்கள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் சங்க பிரதிநிதிகளுடன் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த இடர்பாடு தொடர்பாக தலைமைச் செயலாளர் மார்ச் –9, 12,13 ஆகிய நாட்களில் தொடர்புடைய துறைகளின் செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டமும் நடத்தப்பட்டது. உணவு மற்றும்உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் ஆகியன பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற கோரினர். இது தொடர்பாக இன்று முதல்வர் தலைமையில் சம்பந்தப்பட்ட அரசு துறையின் உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

உணவகங்கள், டீக்கடைகள், கிளவுட் கிச்சன் உள்ளிட்ட உணவு உற்பத்தி தொழிற்கூடங்கள் எரிவாயுவிற்கு (LPG) பதிலாக மின்அடுப்புகளை பயன்படுத்தும் போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்விற்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும். ஒன்றிய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் காலம் வரை இந்த மானியம் வழங்கப்படும்.

எரிவாயு (LPG) பயன்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நெருக்கடியை சமாளிக்கும் வகையில் மின் அடுப்புகள் மின் சூடேற்றிகள் உள்ளிட்ட மின் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (UYEGP) கீழ், 25 சதவிகிதம் / அதிகபட்சமாக 3.75 லட்சம் ரூபாய் மானியத்துடன் கடன் வழங்கவும், தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 சதவிகிதம் / 2 லட்சம் ரூபாய் மானியத்துடன் 10 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கவும் மற்றும் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 35 சதவிகிதம் / அதிகபட்சமாக1கோடிரூபாய் வரை மானியத்துடனும் கடன் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 60,698 தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடுவாரியத்தின் இசைவாணையினை பெற்று, எல்பிஜி., சிஎன்ஜி, டீசல், பர்னஸ் ஆயில், விறகு போன்றவற்றை எரிப்பொருளாக பயன்படுத்தி இயங்கி வருகின்றது. இந்நிறுவனங்கள் எல்பிஜி., சிஎன்ஜி, போன்ற எரிபொருட்களுக்கு மாற்றாக மண்ணெண்ணை, ஆர்டிஎஃப், எச்எஸ்டி, பயோமாஸ் போன்றவற்றை எரிபொருளாக பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும், இதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை (CTE/CTO) பெற தேவையில்லை, தகவல் தெரிவித்தால் மட்டும் போதுமானது எனவும், ஒன்றிய அரசு அறிவித்துள்ள எல்பிஜி., சிஎன்ஜி பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் கால அவகாசம் வரை இந்த விலக்கு அமலில் இருக்கும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் 9,300 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக நாள் ஒன்றுக்கு 55 லட்சம் லிட்டர் பால்கொள்முதல்செய்து கையாளும் திறன் உள்ளது. இந்த இடர்பாட்டினால் மீதமாகும் தேவைக்கு அதிகமான பாலினை பால் உற்பத்தியாளர்களிடமிருந்து ஆவின் பால் கூட்டுறவு சங்கங்களில் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க ஆணையிடப்பட்டுள்ளது. எரிவாயு (LPG) பற்றாக்குறையால் உணவகங்கள் மூடப்படும் வேளையில் விவசாயிகளால் உற்பத்திசெய்யப்படும்காய்கறி விற்பனை பாதிக்கப்படலாம். விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை கருத்தில்கொண்டு விவசாயிகளை தாங்கள் விளைவித்த காய்கறிகள் மற்றும் பழங்களை இடர்பாடின்றியும், 194 உழவர் சந்தைகளில் எவ்வித கட்டுப்பாடு இல்லாமல் விற்பனை செய்ய அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மாநில அளவில் வணிக நிறுவனங்களுக்கு முறையாக எல்பிஜி சிலிண்டர் அளவீட்டினை ஒதுக்கீடு செய்து கண்காணிக்க தலைமைச் செயலாளர் அவர்கள் கண்காணிப்பில் அரசு உயர் அலுவலர்கள் கொண்ட குழு செயல்படவும், இதேபோன்று மாவட்ட அளவில் எண்ணெய் விநியோக நிறுவனங்களின் பொறுப்பு அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு கண்காணிக்கவும் முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

இத்துடன், இந்த மாதம் பொது விநியோக திட்டத்திற்கு கூடுதலாக 3228 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"போர்களால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்க அரசு பாடுபடுகிறது" பிரதமர் மோடி பேச்சு

சில்சார் (அசாம்): "உலகளாவிய மோதல்களால்மக்களுக்குஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க மத்திய அரசு பாடுபடுகிறது. ஆனால், காங்கிரஸ் கட்சி மக்கள் மத்தியில் பீதியை கிளப்புகிறது" என்று பிரதமர் மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

அசாமின் சில்சார் நகரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் ரூ.23,550 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள திட்டங்களை தொடங்கிவைத்து உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, உலகம் முழுவதும் போர்களை எதிர்கொண்டு வரும் நிலையில்,நாட்டுமக்கள் மீது அவற்றின் தாக்கத்தைக் குறைப்பதற்காக நாங்கள் தொடர்ந்து முயன்று வருகிறோம். காங்கிரஸ் கட்சி ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சியாக செயல்பட்டிருக்கவேண்டும்.ஆனால் அக்கட்சி அதில் இருந்து தவறிவிட்டது. மாறாக, மக்களிடையே பீதியை உருவாக்கவே அது முயல்கிறது.

அசாம் குறித்தோ அல்லது தேசம் குறித்தோ அவர்களுக்கு எந்த ஒரு தொலைநோக்குப் பார்வையும் கிடையாது. மாறாக, மோடியை அவதூறாகப் பேச வேண்டும், வதந்திகளையும் பொய்களையும் பரப்ப வேண்டும், மக்களை திசை திருப்பும் வகையில் போலியான ரீல்ஸ்களை உருவாக்க வேண்டும். இதுதான் அவர்களுக்குத் தெரியும்.

முழு உலகமும் செயற்கை நுண்ணறிவு துறை மீது மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. டெல்லியில்இதுதொடர்பாக நடைபெற்ற உச்சி மாநாடு வெற்றிகரமாக இருந்தது. இந்த உச்சி மாநாட்டில் உலகத் தலைவர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், அவற்றின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். ஆனால், காங்கிரஸ் கட்சியோ ஆடையை கிழத்துக்கொண்டு ஒரு நாடகத்தை அரங்கேற்றியது. நாட்டையே அக்கட்சி அவமானப்படுத்த முயன்றது. ஒட்டுமொத்த நாட்டு மக்களும் இந்த ஆபாச போராட்டத்தைக் கண்டித்தார்கள். ஆனால், காங்கிரஸின்ராஜகுடும்பம் மட்டும் தங்கள் செயலை நினைத்து தங்களுக்குத் தாங்களே முதுகில்தட்டிக்கொடுத்துப் பாராட்டிக்கொள்கின்றனர். காங்கிரஸ் கட்சியிடம் தங்கள் சொந்த ஆடைகளைக் கிழித்துக்கொள்வதைத் தவிர வேறு எதுவும் மிச்சமில்லை. காங்கிரஸ் கட்சி தொடர்ந்து ஒவ்வொரு தேர்தல்களிலும் தோல்வி அடைந்து வருகிறது. அவர்களின் தோல்வி எண்ணிக்கை விரைவில் 100–ஐ தொடும். தொடர் தோல்விகளால்ஏற்பட்டவிரக்தி காரணமாக அக்கட்சி தேசத்துக்கு எதிராக ஒரு போர்க்களத்தையே தொடங்கியுள்ளது. அக்கட்சியின் தலைவர்கள் நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதிலேயே மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

வடகிழக்கு மாநிலங்களை காங்கிரஸ் கட்சி எவ்வாறு தனித்து விட்டுவிட்டதோ அதேபோன்று, பராக் பள்ளத்தாக்கை பலவீனப்படுத்துவதிலும் அது முக்கிய பங்காற்றியது. இந்தியா சுந்திரம் அடைந்தபோது பராக் பள்ளத்தாக்குக்கு இருந்த கடல்வழித் தொடர்பை துண்டிக்கும் வகையில்எல்லைவரையறுக்கப்படுவதை காங்கிரஸ் கட்சி அனுமதித்தது. ஒரு காலத்தில் தொழில் மையமாகத் திகழ்ந்த பராக் பள்ளத்தாக்கு தனது அடிப்படை வலிமையை இழந்துவிட்டது. இன்று, அதை மாற்றியமைக்கும் பணியில் பாஜக அரசு ஈடுபட்டுள்ளது" என தெரிவித்தார். மத்திய கிழக்கில் தீவிரமடைந் துள்ள ஈரான் – அமெரிக்கா, இஸ்ரேல் மோதல் காரணமாக இந்தியாவில் சமையல் எரிவாயு சிலிண்டர் (எல்பிஜி) விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி கிட்டத்தட்ட மூடப்பட்டுள்ளதால், கத்தார் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகளில் இருந்து எல்பிஜி வருவது தடைபட்டுள்ளது. இதனால், கடந்த சில நாட்களாக வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. அச்சமடைந்த மக்கள், வீட்டு உபயோக சிலிண்டருக்கான புக்கிங்கை அதிக அளவில் செய்யத் தொடங்கினர். போன் மூலம் அதிக அளவில் புக்கிங் செய்யப்படுவதால் அந்த சிஸ்டம் செயலிழந்தது. இதையடுத்து எல்பிஜி ஏஜென்சி முன்பு அதிக அளவில் பொது மக்கள் குவியத் தொடங்கினர். இந்நிலையில், எல்பிஜி சிலிண்டர் உற்பத்தி 30 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், மக்கள் பீதி அடைய வேண்டாம் என்றும் மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தப் பின்புலத்தில், உலகளாவிய மோதல்களால் மக்களுக்கு ஏற்படும் குறைக்க மத்திய அரசு பாடுபடுகிறது என்று பிரதமர் மோடி கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

ஜப்பானை நோக்கி 10 பாலிஸ்டிக் ஏவுகணைகளை பாய்ச்சிய வட கொரியா

ஈரான் மீதான அமெரிக்கா – இஸ்ரேல் போர், மத்திய கிழக்கு பதற்றம், உக்ரைன் – ரஷியா போர் என உலகம் அசாதாரண சூழலில் இருந்து வரும் சூழலில் வட கொரியா வழக்கம்போல ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது.

ஆனால் இந்த முறை ஜப்பான் கடற்கரைப் பகுதியை நோக்கி ஒரே நேரத்தில் சுமார் 10 பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவி வட கொரியா பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

தென்கொரியாவின் தகவலின்படி,வடகொரியாவின் சுனான் (Sunan) பகுதியிலிருந்து மதியம் 1:20 மணியளவில் இந்த ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன.

சுமார் 10 ஏவுகணைகள் ஒரே நேரத்தில் ஏவப்பட்டுள்ளன. இது வடகொரியாவின் வழக்கமான சோதனைகளை விடப்பெரிய அளவிலான நடவடிக்கையாககருதப்படுகிறது. இந்த ஏவுகணைகள் ஜப்பான் கடற்பகுதியை நோக்கிச் சென்றன. அவை ஜப்பானின் பிரத்யேக பொருளாதார கடல் மண்டலத்திற்கு வெளியே விழுந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

இந்த ஏவுகணை வீச்சு குறித்து ஆய்வு செய்யவும்,ஏதேனும்சேதங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதைச் கண்டறியவும், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் அவசரக்கால குழு அமைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து நடத்தி வரும் வருடாந்திர ராணுவப் பயிற்சிக்கு தனது எதிர்ப்பைக் காட்டவே வடகொரியா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்று கூறப்படுகிறது.

இந்தப் பயிற்சிகள் தொடர்ந்தால் பயங்கரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று வடகொரியா ஏற்கனவே எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஈரான் மீதான அமெரிக்கா – இஸ்ரேல் தாக்குதலை வட கொரியா கடுமையாக கண்டித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம் DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

கள்ளக்குறிச்சி மாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் திருக்கோவிலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கல்பனா(PO), சேர்மன் அஞ்சலாட்சி அரசகுமார்,ஒன்றிய செயலாளர்கள் பூமாரி கிருஷ்ணமூர்த்தி, எம் ஆர் (எ) எம் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

2026,2027 ஆம் ஆண்டிற்கான முதலாம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கு வந்துள்ள மாணவர்களை வரவேற்றார்

ஈரோடு மாவட்டம், வீரப்பன்சத்திரம்,மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் (13.03.2026) அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 2026-2027 ஆம் ஆண்டிற்கான முதலாம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கு வந்துள்ள மாணவ, மாணவர்களை வரவேற்றார்.

மாணவர் பள்ளியில் இன்றைய தினம், 2026-2027 ஆம் ஆண்டிற்கான முதலாம் வகுப்பு 59 சேர்க்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் மாவட்ட-ஆட்சித்தலைவர் அவர்கள் புதிதாக சேர்ந்த மாணவர்களுக்குமாலை அணிவித்தும், இனிப்புகள் வழங்கி வரவேற்றார். மேலும், அரிசியில் அ என்ற எழுத்தை எழுதி அவர்களின் முதல் பள்ளிப்படிப்பை துவக்கி வைத்து மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும், மாணவ, மாணவியர்களுக்கு நோட்டுபுத்தங்கள் மற்றும் வண்ணப்பென்சில்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மைகல்வி அலுவலர் முனைவர்.மான்விழி உட்பட பள்ளி தலைமையாசிரியர், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பெருமதிப்பிற்கும் மரியாதைக்குரிய ஐயா O.பன்னீர்செல்வம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் O.P.இரவீந்திரநாத் அவர்களையும் தென்காசி தெற்கு மாவட்ட கழக செயலாளர் மரியாதைக்குரிய அண்ணன் வே.ஜெயபாலன் அவர்களது தலைமையில் வரவேற்றார்

கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள கே.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 17வது பட்டமளிப்பு விழா

1339 மாணவ மாணவியர்கள் பட்டங்களை பெற்றனர்

கோவை மாவட்டம் சரவணம்பட்டி பகுதியில் கேஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கி வருகின்றது இக்கல்லூரியின் 17 வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் முனைவர் அசோக் பக்தவச்சலம் தலைமைதாங்கினார். மேலும் மாணவ மாணவியர்கள் மத்தியில் அவர் கூறியதாவது.. ஒவ்வொரு மாணவரின் கடின உழைப்பும், பெற்றோர்கள் கேஜி கல்வி நிலையத்தின் மீது வைத்த நம்பிக்கையும், மாணவர்களுக்கு இந்த வெற்றியை வழங்கி உள்ளது என்று தெரிவித்தார்.தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் முனைவர் வித்யா கல்லூரியின் ஆகச்சிறந்த செயல்பாடுகள் குறித்து ஆண்டறிக்கையினை வாசித்தார். பேராசிரியர் முனைவர் வின்சென்ட் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 1339 மாணவ மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி பாராட்டுக்கள் தெரிவித்தார். இதில் 16க்கும் மேற்பட்ட பல்வேறு துறை சார்ந்த இளங்கலை மற்றும் முதுகலை பயின்ற இளம் பட்டதாரிகள் பட்டங்களை பெற்றுக்கொண்டு சமூகப் பொறுப்புணர்வோடும், உறுதியுடனும் செயல்படுவோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். தொடர்ந்து பாரதியார் பல்கலைக்கழக தரவரிசையில் 32 மாணவ மாணவிகள் இடம் பெற்றுள்ளனர். தொடர்ந்து 1116 இளங்கலை மாணவர்களுக்கும், 102 முதுகலை மாணவர்களுக்கும், 121 முதுகலை கணினி பயன்பாட்டியல் துறை மாணவர்களும், 2 முனைவர் பட்டங்களையும் பெற்றனர். இந்த நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் வித்யா, மற்றும் கல்லூரியின் செயலர் முனைவர் வனிதா, தேர்வு கட்டுப்பாட்டு துறை நிர்வாக இயக்குனர் கவிதா, கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி அரவிந்த் குமார் ராஜேந்திரன், மற்றும் மாணவ மாணவியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில்

பண்ணாரி மாரியம்மன் குண்டம் பெருந்திருவிழாவினை முன்னிட்டு முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து துறைசார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம்

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சிக்கரசம்பாளையம் கிராமத்தில் (13.03.2026) அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், குண்டம் பெருந்திருவிழாவை முன்னிட்டு துறைச் சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பண்ணாரி மாரியம்மன் குண்டம் திருவிழாவினையொட்டி திருக்கோயிலில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பக்தர்களுக்கு தேவையான குடிநீர் தங்கு தடையின்றி கிடைக்கவும், மேலும் திருக்கோயில் வளாகத்தில் தூய்மை பணியாளர்களை போதுமான அளவில் நியமித்து தூய்மை பணிகள் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த தற்காலிகதடுப்பு சுவர்களை அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.பக்தர்கள் குண்டம் இறங்கும்போது குண்டத்துக்கு அருகில் மருத்துவக்குழு ஒன்று தயார் நிலையில் இருக்க வேண்டும். பக்தர்களுக்கு தேவையான கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். தீயணைப்பு துறையின் மூலம் தீத்தடுப்பு வாகனம் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் பக்தர்களின் வசதிக்காக போக்குவரத்துத்துறையின் மூலம் அதிக அளவில் சிறப்பு பேருந்துகளை இயக்கவும்,மின்சாரத்துறையின் மூலம் தடையில்லா மின்சாரத்தை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த தற்காலிக தடுப்பு சுவர்களை அமைத்த பாதுகாப்பு மேற்கொள்ள வேண்டும். மேலும், வருவாய்த்துறை மற்றும் காவல்துறையினர் சட்டம் ஒழுங்கினை பராமரிக்க வேண்டும். அனைத்து துறையினரும் முன்னேற்பாடு பணிகளை தொய்வின்றி திருவிழாக்காலத்திற்கு முன்னரே செய்து முடித்து, திருவிழா நல்ல முறையில் நடைபெற ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். தொடர்ந்து பக்தர்கள் எந்த வழியாக செல்ல வேண்டும் என்பது குறித்தும் தெளிவாக ஒரு வரைப்படங்களை உருவாக்கி கொடுக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், உதவி வன பாதுகாவலர் (பயிற்சி) நிதின் ஹெச். ஆர். இணை ஆணையர் பரஞ்ஜோதி, இந்து சமய நிலையத்துறை துணை ஆணையர் நந்தகுமார், பரம்பரை அறங்காவலர்கள் புருஷோத்தமன்,ராஜாமணி,தங்கவேல்,அமுதா,பூங்கொடி, புஷ்பலதா, சத்தியமங்கலம், நகராட்சி ஆணையாளர் வெங்கடேஸ்வரன், சத்தியமங்கலம் வட்டாட்சியர் ஜமுனா ராணி உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே வேடநத்தம் கிராமத்தில் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவியை பாலியல் வன்முறை செய்த கயவர்களை கைது செய்யக்கோரியும், தூத்துக்குடி வடக்கு மாவட் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பெருமாள்சாமி பாதிக்கப்பட்ட மாணவியின் தாய் தந்தையும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில தலைவர் செல்வப்பெருந்தகை தொலைபேசியில் வாட்ஸ் ஆப் மூலம் தனது வருத்தத்தை தெரிவித்தார். உடன் காங்கிரஸ் பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

சங்கரன்கோவில் ஆர்.சி நடுநிலைப்பள்ளியில் 80வது ஆண்டு விழா

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஆர்.சி நடுநிலைப்பள்ளியில் 80-வது ஆண்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர் பழனிச் செல்வம் தலைமை வகித்தார். ஆர்சி நடுநிலைப்பள்ளி தாளாளர் அருள்ராஜ் அடிகளார் ஆசி உரை வழங்கினார். தலைமை ஆசிரியர் தவமணி ஆண்டறிக்கை வாசித்தார்.

உதவி தலைமை ஆசிரியை மரிய எலிசபெத் வரவேற்புரை ஆற்றினார். ஆசிரியர்கள் ரூபி பொற்கமலம், செல்வி ராஜகுமாரி, செல்வி, சிவப்பிரியா, அருணா ஆகியோர் வரவேற்று பேசினார்கள். ஆண்டு விழாவினை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவில் சங்கரன்கோவில் வட்டார கல்வி அலுவலர்கள் கிருஷ்ண பாரதி, குருசாமி, மேற்பார்வையாளர் முத்துச்செல்வி, கரிவலம்வந்தநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சுகுமார், கால்நடை உதவி மருத்துவர் சந்திரலேகா, குருக்கள்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய அரசு மருத்துவர் வசந்த கோகிலா,சமுதாய நாட்டாமைகள் ரஜினி,பன்சிலால், பரமசிவன், அற்புதமணி, தம்பி சேவியர், ஆரோக்கியராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். விழாவில் ஓய்வு பெற்ற உதவி தலைமை ஆசிரியர் லூக்காஸ், ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் ராமசாமி, நியூ இமேஜ் நிறுவனர் இசக்கிமுத்து, ஓய்வு பெற்ற கல்வித்துறை கண்காணிப்பாளர் சௌந்தரராஜன், லூர்து சகாயம் ஆசிரிய பயிற்றுனர்கள் ஆனந்த், சண்முக வடிவு, பட்டதாரி ஆசிரியர் கார்த்திக், எல் ஐ சி ஸ்ரீதர், முப்புடாதி மற்றும் ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளை குமரேசன், அந்தோணி, சமாதானம், வர்கீஸ் அருள் சகாயராஜ் ஆகியோர் தொகுத்து வழங்கினர். முடிவில் மிக்கேலம்மாள் நன்றி கூறினார்.

கோவை பந்தயசாலையில் நிலவைத் தொடும் உத்வேகச் சிலை!

கோவையின் முக்கியப் பகுதியான ரேஸ்கோர்ஸ் காஸ்மோபாலிட்டன் கிளப் சந்திப்பு அருகே, மாணவர்களின்லட்சியக்கனவுகளைப்பிரதிபலிக்கும் வகையிலான பிரம்மாண்டமான நிலவைத் தொடும்' உத்வேகச் சிலை!

எனும் கருத்துரு கொண்ட சிலை திறக்கப்பட்டுள்ளது.தி கேம்ஃபோர்ட் இன்டர்நேஷனல் பள்ளி சார்பில் அமைக்கப்பட்ட இந்தச் சிலை திறப்பு விழாவில் கோவை மாவட்ட ஆட்சியர்பவன்குமார்கிரியப்பனவர்மற்றும்கோவை மாநகராட்சிஆணையர்சிவகுருபிரபாகரன்,ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக்கலந்துகொண்டுசிலையை திறந்து வைத்தனர். உலக உருண்டையின் மீது நின்றுகொண்டு, இரண்டு சிறுவர்கள் ஒரு கயிற்றின் மூலம் நிலவைத் தங்களை நோக்கி இழுப்பது போல் எல்லைகளை தாண்டி கனவு காணுங்கள் எனும் கருத்துருவோடு இந்தச் சிலை கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் எல்லைகளைத் தாண்டிச் சாதிக்கும் மனப்பான்மையைக் குறிக்கிறது.

இது குறித்து கேம்ஃபோர்டு சர்வதேச பள்ளித் தலைவர்அருள்ரமேஷ்மற்றும்தாளாளர்பூங்கோதை அருள் ரமேஷ் ஆகியோர் கூறுகையில், அறிவாற்றல், மன உறுதி மற்றும் நற்பண்புகள் இருந்தால் எட்ட முடியாத கனவு என்று எதுவுமே இல்லை என்பதை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் உணர்த்துவதே இச்சிலையின் நோக்கம்" எனத் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

கோவை அரசூர் பகுதியில் உள்ள கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின்

கேன்சர் டெவலப்மெண்ட் சென்டர் சார்பில் அக்செலரேட் 2026 எனும் நிகழ்ச்சி நடைபெற்றது

கோவை அரசூர் பகுதியில் உள்ள கேபிஆர் கலை அறிவியல்மற்றும்ஆராய்ச்சிகல்லூரியின்,கேன்சர் டெவலப்மெண்ட் சென்டர் சார்பில் அக்செலரேட் 2026 எனும், நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சியானது, மாணவர்களின் தொழில் வளர்ச்சிமற்றும்புதியதொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி கல்லூரி மேலாண்மை மற்றும் முதல்வர் டாக்டர் கீதா வழிகாட்டுதலுடன் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் டாக்டர்கள் வருண்,ஜோசப்,அருண் மணி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கல்லூரியின் அனைத்துபள்ளிகளின்டீன்களும்இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மேலும் 24 நிறுவனங்களின் உயர்நிலை மனிதவள நிர்வாகிகள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு மாணவர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினர். இதில், 1000-க்கும் மேற்பட்ட மாணவர்கள்கலந்துகொண்டுதொழில்திட்டமிடல் மற்றும் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி குறித்து பயனுள்ள அறிவைப் பெற்றதுடன், பல்வேறு சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அல்லிநகரம் 5 வது வார்டில் மட்டன் ஸ்டால் தெருவில் அய்யப்பன் கோவில் அருகில்உள்ள இடம் சமூக விரோதிகளின் மதுக்கூடாரமாக மாறி வருகிறது. பலமுறை அல்லிநகரம் காவல் நிலையம் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமும் மனு கொடுத்தும் எவ்வித பலனும் இல்லை. யாரிடம் முறையிடுவதென்றும் தெரியவில்லை.மாவட்டகாவல்களைஎடுக்கநடவடிக்கை எடுக்குமா, Dr.S.கிருஷ்ணபிரபா அய்யப்பன் 5 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் , அல்லிநகரம், தேனி.

தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு. முத்துசாமி (13.03.2026) அன்று ஈரோடு தந்தை பெரியார் மாவட்ட அரசு தலைமை பல்நோக்கு உயர் சிறப்பு சிகிச்சை மருத்துவமனையில் தேசிய நலக்குழுமம் தமிழ்நாடு மூலம் ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அதிநவீன நுண்கதிர் இயந்திரத்தின் செயல்பாட்டினை துவக்கி வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.

தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி (13.03.2026) அன்று ஈரோடு மாநகராட்சி, வைராபாளையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூடம் கூடுதல் கட்டிடத்தினை திறந்து வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே

ஸ்ரீனிவாசா பாம்ஸ் இந்தியாவின் முதல் 3 இன் 1 முதியோர் சொகுசு குடியிருப்புத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே ஓய்வுக்கால வாழ்க்கை முறையை சொகுசாக மாற்றி அமைக்கும் வகையில், மேற்குத் தொடர்ச்சி மலையின் எழில் மிகு பின்னணியில், தென்னந்தோப்புகளுக்கு மத்தியில் 160 சொகுசு குடியிருப்புகள் கொண்ட ஸ்ரீனிவாசாபாம்ஸ்என்ற இந்தியாவின் முதல் 3 இன் 1 முதியோர் சொகுசு குடியிருப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மார்ச் 13 முதல் 15 வரை வீடு வாங்குவோருக்கு பதிவுக் கட்டணம் இலவசம் என அறிவிக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவின் மிக நம்பிக்கைக்குரிய முதியோர் குடியிருப்பு உருவாக்குனர்களில் ஒருவராகிய ஆலம் ஸ்டெப்ஸ்டோன் சீனியர் ஹெவன் புரமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நாட்டின் முதல் 3-இன்-1 முதியோர் சொகுசு குடியிருப்புத் திட்டமான ஸ்ரீனிவாசா பாம்ஸ் ஐ உருவாக்கியுள்ளது இதன் இரண்டாம் கட்ட விரிவாக்கத் திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

கோயம்புத்தூர், ∴பேர்∴பீல்ட் பைமேரியட் ஹோட்டலில் மார்ச் 13 முதல் 15 வரை நடைபெறும் இந்நிறுவனத்தின் கண்காட்சியில் வீடு வாங்குவோருக்கு, பத்திரப் பதிவு இலவசமாக செய்து தரப்படும். ஒரு குடியிருப்பின் விலை 37 லட்சத்திலிருந்து தொடங்குகிறது.

பொள்ளாச்சி அருகில், மிக அமைதியான சூழலில், 1.18 ஏக்கர் பரப்பளவில் பசுமையான தென்னந்தோப்புகளுக்கு இடையே இக்குடியிருப்புத் திட்டம் அமைந்துள்ளது. கம்பீரமான மேற்குத் தொடர்ச்சி மலைகளின் எழில்மிகு காட்சிகளுடன் 160 குடியிருப்புகள் இதில் உருவாக்கப்பட்டுள்ளன. நேர்த்தியான வடிவமைப்பு, உயர்தர வேலைப்பாடுகள் மற்றும் மேம்பட்ட வசதிகளுடன் கூடிய இந்த இல்லங்கள், சொகுசு வாழ்க்கைமுறை, முதியோர் பராமரிப்பு உதவி மற்றும் சமூகத்துடனான ஒன்றிய வாழ்க்கை ஆகிய மூன்றையும் ஒரே குடியிருப்புக் கட்டமைப்பில் தடையின்றி ஒருங்கிணைப்பதன் மூலம் ஓய்வுக்கால வாழ்க்கையை புதிய பரிமாணத்திற்கு இட்டுச் செல்லும். முதியோர்கள் தங்களது பொற்காலத்தைப் பாதுகாப்பாகவும், வசதியாகவும், கண்ணியத்துடனும் கொண்டாடுவதற்கேற்ற ஒரு துடிப்பான சூழலை இத்திட்டம் உறுதி செய்கிறது.

இந்த நிகழ்ச்சியில் இந்நிறுவனத்தின் நிறுவனர் மோதிஷ் குமார், சென்னையை சேர்ந்த டாக்டர் மீனலோச்சினி, சுற்றுச்சூழல் ஆர்வலர் உமா பாஸ்கர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஓய்வுபெற்ற அதிகாரி எம். முத்துக்குமாரசாமி மற்றும் வெங்கடேஸ்வரா தேங்காய் உற்பத்தியாளர்கள் நிறுவனத்தின் தலைவர் அறிவொளி ஆர். முத்துசாமி உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலை அறிவியல் கல்லூரிக்கு ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 17.63 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் முதல் தளம் இரண்டாம் தளம் உள்ள கட்டிடம் கட்டுவதற்கான கலந்துகொண்டு புதிய கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை போடும் பணியை செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் மாலதி ஹெலன், குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ, விசிக செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு, அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்

தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு. முத்துசாமி (13.03.2026) அன்று ஈரோடு மாநகராட்சி, சித்தோடு, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதிய பள்ளிக் கட்டிடத்தினை திறந்து வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.

வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் கருணை அடிப்படையில் 17 நபர்களுக்கு பணிநியமன ஆணை

கலெக்டர் ச.கந்தசாமி வழங்கினார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று (14.03.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வருவாய் நிருவாகம் மற்றம் பேரிடர் மேலாண்மைத்துறையின்சார்பில்கருணை அடிப்படையில் 17 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

நேற்றைய தினம், அரசு அலுவலக பணியில் பணியிடையின் போது மரணமடைந்த 17 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், உதவி ஆணையர் (கலால்) அலுவலகம், தேர்தல் பிரிவு, ஆகிய அலுவலகங்களில் அலுவலக உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டதற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, அலுவலக மேலாளர் (பொது)விஜயகுமார், அலுவலக மேலாளர் (குற்றவியல்) பாலசுப்பிரமணியம், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் 2026 காங்கிரஸ் கமிட்டி தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் சார்பில் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் நிர்வாகிகளுக்கான விருப்பமனு நேர்காணல் தூத்துக்குடி கனி ரெசிடென்சியில் இன்று மாலை நடைபெற்றது. கூட்டத்தில் தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் தலைவர் எஸ்.எம்.சகாயராஜ் நிகழ்ச்சியில் செ.மைக்கில் பிரபாகர் மாநகர் மாவட்ட பொதுச்செயலாளர் நேர்காணலில் கலந்து கொண்டார்.

சமத்துவ மக்கள் கழகம் அலுவகத்தில் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

சமத்துவ மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் எர்ணாவூர் நாராயணன் ஆணையின்படி நியமிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடியில் மாவட்ட தலைமை அலுவலகத்தில் வைத்து மேலிடப் பார்வையாளர்கள் மாநில தொழிற்சங்க செயலாளர் ஜெபராஜ் டேவிட் மாநில கலை இலக்கிய அணி செயலாளர் வக்கீல் அந்தோணி பிச்சை ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. வருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆறு தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய நிர்வாகிகள் மூலம் கிளைக் கழக நிர்வாகிகளை சந்தித்து அனைத்து பூத்களிலும் சமத்துவ மக்கள் கழகம் தேர்தல் பணியினை சிறப்பாக செய்திட வேண்டும் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றிக்கு திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டு வீடு வீடாகச் சென்று வாக்காளர்களை சந்தித்து தமிழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்குகள் கேட்க வேண்டும் வேட்பாளர்கள் அதிகப்படியான வாக்குகளின் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டும் வரும் நாட்களில் விரைந்து தேர்தல் பணியினை முடுக்கி விட தொகுதி பொறுப்பாளர்கள் இப்பொழுது இருந்தே விரைந்து களப்பணி ஆற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் தூத்துக்குடி சட்டமன்ற பொறுப்பாளர் மாலைசூடி அற்புதராஜ் விளாத்திகுளம் சட்டமன்ற பொறுப்பாளர் கண்டிவேல் கோவில்பட்டி சட்டமன்ற பொறுப்பாளர் வக்கீல் சகாயராஜ் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற பொறுப்பாளர் அருள்ராஜ் திருவைகுண்டம் சட்டமன்றபொறுப்பாளர் சதீஷ்மூர்த்தி திருச்செந்தூர் சட்டமன்ற பொறுப்பாளர் அருண் சுரேஷ் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டம் சுரண்டையை அடுத்த குலையநேரி கிராமம் வழக்கறிஞர் அ.கணேசன் B.A.B.L, அவர்கள் மத்திய அரசு நோட்டரி பப்ளிக் வழக்கறிஞராக தேர்வு செய்யப்பட்டார். அவரை வழக்கறிஞர்கள், பத்திர எழுத்தர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர். குலையநேரி கிராமத்தின் முதல் அரசு நோட்டரி பப்ளிக் வழக்கறிஞர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல்மைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

15வது வார்டு மடத்தூர் பகுதியில் திமுக சார்பில் 2000பேருக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்

திமுக தலைவர் முதலமைச்சர் முக.ஸ்டாலின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் 15வது வார்டு மடத்தூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன் தலைமையில் பகுதி செயலாளர் ரவீந்திரன், வட்டச் செயலாளர் பொன்பெருமாள், தொழிலாளர் நல அணி அமைப்பாளர் முருக இசக்கி, அவைத்தலைவர் செல்வம் முன்னிலையில் நடைபெற்றது. விழாவில் மாமன்ற உறுப்பினர் இசக்கி ராஜா அனைவரையும் வரவேற்புரை ஆற்றினார். விழாவில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் 2000பயனாளிகளுக்கு நலத்திட்டங்களை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்;

திமுக தலைவர் முதலமைச்சர் முக.ஸ்டாலின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு 15வது வார்டில் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறோம். கடந்த ஐந்தாண்டு காலமாக திமுக நல்லாட்சி புரிந்து வருகிறது. நம்முடைய முதலமைச்சர் பொறுப்பேற்கும் போது கொரோனா பேரிடர் தலைவிரித்தாடியது. அதற்கு முன்னர் வீட்டிலேயே இரு வெளியே வராதே கடையை திறக்காத, ஸ்கூலுக்கு போகாத, தொழில் செய்யாத, தனித்திரு முடங்கி இரு என்று சொன்னார்கள். குடும்பத் தலைவிகளுக்கு தான் அதிக வேலை நமக்கு வருமானமே இல்லாமல் முடங்கி இருந்த இக்கட்டான நிலை. அதைவிட ஒன்றிய பாஜக அரசு வாசலில் விளக்கை ஏற்று கைத்தட்டு என்று சொல்லி மூடநம்பிக்கை செயலை செய்ய சொன்னாங்க அதையும் சிலர் செய்தார்கள். ஆனால் நமது முதலமைச்சர் ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் உடனடியாக நோய்தடுப்புநடவடிக்கைகளை மேற்கொண்டு பாதுகாப்பு வழிமுறைகளை செயல்படுத்தினார். 38 லட்சம் பேருக்கு உதவித்தொகை

உயர்த்தி வழங்கியுள்ளார். அதே மாதிரி பெண்களுக்கான தொழில் முனைவர் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கு அதிக கடனுதவி, மகளிர் குழுக்களுடைய கடன் தள்ளுபடி, விவசாய பயிர் கடன், கூட்டுறவு வங்கியில் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடுத்த வாக்குறுதிகள் கிட்டத்தட்ட 80 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறார். இன்னைக்கு தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாட்டில் இரட்டை இலக்க வளர்ச்சி 11.19% வளர்ச்சி. தொழில் வளர்ச்சி 12 லட்சம் கோடி ரூபாய் முதலீடு நம் கண்கூடாக பார்க்கிறோம். நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சி அடைந்து தலை நிமிர்ந்து நிற்கிறது. இதனால் ஒன்றிய பாஜக அரசு நீங்கள் வளர்ந்த மாநிலம் உங்களுக்கு ஏன் நிதி தரவேண்டும் என்று கல்விக்கான நிதி மறுப்பு 100 நாள் வேலை திட்ட நிதி மறுப்பு என பாராமுகம் காட்டினாலும் பள்ளிக் கல்வியிலும் உயர் கல்வியிலும் பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்து கல்வியிலும் முதலிடம் என சாதனை படைத்துள்ளோம். எம்மதமும் சம்மதம் அனைவரும் சமம் நாமெல்லாம் தமிழர்கள் என்று சிறப்பான ஆட்சியை நடத்தி வரும் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கரங்களை வலுப்படுத்தி மீண்டும் திமுகவை ஆட்சியில் அமரச் செய்ய வேண்டும் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் இலக்கிய அணி தலைவர் சக்திவேல் வட்ட பிரதிநிதிகள் சோமசுந்தரம், பேச்சிராமன், ஞானசேகர், இளங்கோ, பாலசுரேஷ், பாஸ்கர், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சீனிவாசன், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் சி.என். அண்ணாதுரை, மாநகர வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ரூபராஜா, பகுதி சபா நிர்வாகிகள் முத்துவேல் ராஜ் ஞானபிரகாசம், அண்ணா நகர் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சரத் ராஜசேகர், பரத், பகுதி பிரதிநிதி செல்வம், அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், மணி மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு. முத்துசாமி (13.03.2026) அன்று ஈரோடு மாநகராட்சி, லட்சுமி கார்டன், சாஸ்திரிநகர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக்கடையினை திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.

வேப்பூர் அருகே பல்வேறு ஊராட்சிகளில் புதிய கட்டடங்கள்: விருத்தாசலம் எம்.எல்.ஏ. எம்.ஆர்.ஆர். ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்

கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்த கீழக்குறிச்சி ஊராட்சியில் புதிதாகக் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடத்தை விருத்தாசலம் சட்டப்பேரவை உறுப்பினர் எம்.ஆர்.ஆர். ராதாகிருஷ்ணன் ரிப்பன் வெட்டித் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, காட்டுமைலூர் ஊராட்சியில் ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டடத்தையும், சேப்பாக்கம் கிராம ஊராட்சியில் ரூ. 13 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அவர் திறந்து வைத்தார். இதேபோல, சாத்தியம் ஊராட்சியில் ரூ. 29.70 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடத்தையும் எம்.எல்.ஏ. எம்.ஆர்.ஆர். ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார். இந்தத் திறப்பு விழா நிகழ்வுகளில் நல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிஊ) கொளஞ்சி, பெரியநாயகம் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். மேலும், அந்தந்த ஊராட்சிகளைச் சேர்ந்த ஊராட்சி மன்றச் செயலர்களான கீழக்குறிச்சி வீரமுத்து, காட்டுமைலூர் கொளஞ்சி, சேப்பாக்கம் தங்க. சரவணன், சாத்தியம் செந்தில்குமார், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கீழக்குறிச்சி முருகேசன், காட்டுமைலூர் மகேஸ்வரி, சாத்தியம் வெங்கடேசன் மற்றும் சேப்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கச் செயலர் பழனி, விற்பனையாளர் பரமேஸ்வரி, காங்கிரஸ் வட்டாரத் தலைவர்கள் முருகானந்தம், செல்வா ஆனந்த் உள்ளிட்ட திரளான திமுக, காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சித்தாமூர் ஒன்றியத்தில் பல்வேறு ஊராட்சிகளில் மக்களுக்கான நலத்திட்ட பணிகள் அர்ப்பணிப்பு

செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு பங்கேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெரிய கயப்பாக்கம் இந்தளூர் கொளத்தூர் தேன்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் செய்யூர் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து மக்களுக்கான நலத்திட்ட உதவிகளை தொடங்கி வைத்தார் இந்தளூரில் புதிதாக கட்டப்பட்டிருந்த புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் திறப்பு விழா மற்றும் கலையரங்கம் கட்டிடம் நெல் களம் அமைப்பதற்கான பூமி பூஜை கொளத்தூர் ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் திறப்பு மற்றும் புதிய ரேஷன்கடை திறப்பு தேன்பாக்கம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது

செய்யூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு கலந்து கொண்டு நிகழ்ச்சிகள் தொடங்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியில் சித்தாமூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர் குணசேகரன். விசிக மாவட்ட செயலாளர் புகழேந்தி,

ஒன்றிய துணைச் செயலாளர் பாஸ்கரன். என்கிற தனசேகரன் ஒன்றிய கவுன்சிலர் குப்பன். இந்தளூர் ஊராட்சி மன்ற தலைவர் சிவா. பெரிய கயப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் லோகநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கோபால், ஒன்றியகவுன்சிலர் ரேவதி வேதாச்சலம். கொளத்தூர் ஊராட்சி மன்றதலைவர் செல்வி செல்லப்பன். சித்தாமூர் ஒன்றிய நியமன உறுப்பினர் வெங்கடேசன் ,தேன்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் மாணிக்கம். ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் பழனி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சியில் 27 வார்டுகளிலும் உள்ள பேவர் பிளாக் சாலைகளை சுமார் 3 கோடி திட்ட மதிப்பீட்டில் புதுப்பித்தல் பணிக்கு நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி தலைமையிலும், ஆணையாளர் கோபாலகிருஷ்ணன், துணைத் தலைவர் பாலசுந்தர், நகராட்சி செயலாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் முன்னிலையிலும் பூஜை மேற்கொள்ளப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

சேலம் மாவட்டம் ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தின் புதிய அலுவலக கட்டிடம் ரூ. 5.46 கோடியில் கட்டப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை நேற்று அமைச்சர் ராஜேந்திரன் ரிப்பன் வெட்டி, குத்து விளக்கேற்றி திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், அமைச்சர் மற்றும் ஆட்சியர் ஆகியோர் அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகளையும் நட்டனர். மேலும், கட்டிடத்தையும் பார்வையிட்டனர்.

தென்காசி மாவட்டம் சாம்பவர் வடகரை எஸ் டி பி ஐ கட்சியின் சார்பாக Sசாகுல் ஹமீது தலைமையில் இப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சுரண்டை நகரத் தலைவர் அப்பாஸ் மற்றும் நகர துணைத் தலைவர் Sமறைக்காயர் மற்றும் சுரண்டை நகரச் செயலாளர் அமல்ராஜ் கலந்து கொண்டார், இதில் சிறப்பு அழைப்பாளராக விமன் மொமென்ட் மாவட்ட துணைத் தலைவர் முபினா சிறப்புரை ஆற்றினார்கள் மற்றும் மாவட்டச் செயலாளர் சுளைகால் கலந்து கொண்டார், இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சாம்பவர் வடகரை ஜமாத் கமிட்டி சார்பாக செயலாளர் கனி, தென்காசி தொகுதி செயலாளர் கோல்டன் செய்யது அலிபாதூஷா, மற்றும் ஏஎஸ்எம் மொத்த காய்கறி கமிஷன் கடை உரிமையாளர் கலந்து கொண்டார்கள் இந்நிகழ்ச்சியில் அனைத்துசமுதாய மக்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர் இறுதியாக ஜலால் காமிலா அவர்கள் துவா ஓதினார்கள்.

சேலம் நாட்டாண்மை கழக அலுவலகத்தில் மக்களை தேடி மருத்துவ ஊழியர் சங்கத்தினர் 2வது நாளாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். சேலம் மாவட்ட தலைவர் பாலாம்பிகா தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில், ஊழியர்களின் ஊக்கத்தொகையை நேரடியாக வங்கிக்கணக்கில் செலுத்த வேண்டும், மாத ஊக்கத்தொகையை ரூ. 5 ஆயிரத்தில் இருந்து ரூ. 15 ஆயிரமாக உயர்த்த வேண்டும், பணி காலத்தில் உயிரிழந்த ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு அரசு வேலையும் நிவாரணமும் வழங்க வேண்டும், அனைத்து ஊழியர்களுக்கும் வார விடுமுறை வழங்க வேண்டும் உள்ளிட்ட 21 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

ஈரோடு வ.உ.சி. பூங்காவில் அமைந்துள்ள நேதாஜி தினசரி காய்கறி சந்தை அருகில் தமிழ் மாநில காங்கிரஸ் இளைஞரணி சார்பாக போதை ஒழிப்போம் கையெழுத்து இயக்கம்

சமூகம் காப்போம்.. ஈரோடை மீட்போம்... என்ற முழக்கத்தோடு மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் ஈரோடு மத்திய மாவட்ட இளைஞர் அணித் தலைவர் திரு கே.ரமேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த கையெழுத்து இயக்கத்தில் மாநிலத் துணைத் தலைவர் திரு விடியல் எஸ் சேகர் மற்றும் மாநில பொதுச் செயலாளர் திரு எம். யுவராஜா அவர்கள் கலந்துகொண்டு கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்கள். இளைஞர் அணி மேற்கு மண்டல தலைவர் திரு அபிராமி செந்தில்குமார், மத்திய மாவட்ட இளைஞரணி துணைத்தலைவர் திரு மாயா வெங்கடேஷ் மாவட்ட பொதுச் செயலாளர் சஞ்சய், காந்திமதி உட்பட மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்...

அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (14.03.2026) ஈரோடு வார்டு எண் 16 கிருஷ்ணம்பாளையம், சிந்தன்நகரில் பகுதியைச் சேர்ந்த பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைபட்டாக்களை வழங்கினார். உடன் ஈரோடு கிழக்குசட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

முத்து தேவன் பட்டி பகுதியில் தனியார் தொழிற்சாலை சுவர் கட்டும் பணிக்காக கோவிலை இடித்து தரைமட்டமாக்கிய நபர்கள் மீது நடவடிக்கை எடுத்து மீண்டும் கோவில் கட்ட அனுமதி வழங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். தேனி மாவட்டம் முத்து தேவன் பட்டி பகுதியில் சுமார் 110 குடும்பங்கள் சுமார் 35 ஆண்டுகளாக கோவிலை வழிபட்டு வந்தனர். இந்த கோவிலை அருகே உள்ள தனியார் தொழிற்சாலை முதலாளி சுற்றுச்சுவர் கட்டும்பணியின் போது கோவிலை இடித்து தரைமட்டம் ஆக்கிவிட்டார். எனவே அப்பகுதியில் மீண்டும் கோவில் கட்டி வழிபட அனுமதி வழங்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்

அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (14.03.2026) ஈரோடு மாநகராட்சி, ரங்கம்பாளையம், ரயில்நகரில் புதிய நியாய விலைக் கடையினை திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.

திருப்புவனம் ஒன்றியத்தில் மேம்பாட்டு நிதியின் கீழ் நலத்திட்டங்களை பொதுமக்களுக்கு வழங்கிய தமிழரசி ரவிக்குமார்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் மடப்புரம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தினை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மடப்புரம் ஊராட்சி வடகரையில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி கட்டிடத்தினையும், பாப்பான்குளம் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலை கடையினையும், ஏனாதி, தேளி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பயணியர் நிழற்குடையினையும் ரிப்பன் வெட்டியும், குத்து விளக்கேற்றியும் சட்டமன்ற உறுப்பினர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் திருப்புவனம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம். ஏ. கடம்பசாமி, மாவட்ட விவசாய அணி துணைத் அமைப்பாளர் முருகன், ஊராட்சி செயலாளர் கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர், ஒன்றிய நகர பேரூர் மற்றும் ஊராட்சிகளை சேர்ந்த திமுக கட்சி நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.